www.usefuldesk.com

No. of Printed Pages : 7

211960

**8701**

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் - முதல் தாள்

# Language — Part I — TAMIL — Paper I

(செய்யுள், உரைநடை)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள்** : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு** : (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் 49 -க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அடிபிறழாமல் அமைதல் வேண்டும்.

www.usefuldesk.com

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

**I.** உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **6x1=6**

**1.** 'அடிகள் நீரே அருளுக' என்று கூறியவர் ________.

(அ) கம்பர் (ஆ) சாத்தனார் (இ) இளங்கோவடிகள்

**2.** நற்றிணை ________ நூல்களைச் சார்ந்தது.

(அ) எட்டுத் தொகை

(ஆ) பத்துப்பாட்டு

(இ) பதினெண் கீழ்க்கணக்கு

[ திருப்புக

www.usefuldesk.com

www.usefuldesk.com



3. கம்பராமாயணம் ________ காண்டங்களைக் கொண்ட நூல்.
(அ) எட்டு (ஆ) மூன்று (இ) ஆறு

4. பெண்களின் பெருவீரத்தினைப் பாடிய பெண்பாற் புலவர் ________.
(அ) ஒக்கூர் மாசாத்தியார்
(ஆ) ஔவையார்
(இ) நச்செள்ளையார்

5. 'உலவு' என்னும் சொல்லின் அடியாகப் பிறந்த தமிழ்ச் சொல் ________.
(அ) ஞாலம் (ஆ) உலகம் (இ) உளது

6. 'விரல்கள் பத்தும் மூலதனம்' என்னும் பாடலின் ஆசிரியர் ________.
(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) தாரா பாரதி

பகுதி - 2

II. கோடிட்ட இடத்தை நிரப்புக. 6x1=6

7. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் ________.

8. நால்வகைப் பாக்களும் வயலுக்கு ________ அமைந்துள்ளன.

9. உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகம் தோன்றக் காரணமானவர் ________.

10. திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் ________ என்னும் பொருளால் ஆனது.

11. தமக்குக் கொடுக்கப்பட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்தவர் என்று அம்பேத்கரை பாராட்டியவர் ________.

12. இராமலிங்கர் தமிழ் மொழியே ________ தரும் என்று கருதினார்.

www.usefuldesk.com

www.usefuldesk.com



## பகுதி - 3

**III.** பொருத்துக. **4x1=4**

13. மாணிக்கவாசகர் — சீறாப்புராணம்

14. திருநாவுக்கரசர் — கலித்தொகை

15. உமறுப்புலவர் — திருவாசகம்

16. நல்லந்துவனார் — தேவாரம்

## பகுதி - 4

**IV.** விடைக்கேற்ற வினா அமைக்கவும். **4x1=4**

17. உலகில் மொழி உருவம் பெறுவதற்கு முன் இசை பிறந்துவிட்டது என்பர்.

18. சொல்லக் கருதும் செய்தியைச் சுவையுடன் சொல்லுதல் வேண்டும்.

19. காந்தியடிகள் பகவத் கீதையைப் படித்ததன் மூலம் மனவுறுதியைப் பெற்றார்.

20. 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை' என்று சிந்தித்தவர் பெரியார்.

www.usefuldesk.com

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

## பகுதி - 1

**V.** **கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **5x2=10**

21. கொக்கைச் சான்று காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது ?

22. கணிமேதாவியார் – குறிப்பு வரைக.

23. குகன் இராமனிடம் வேண்டியது என்ன ?

24. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர் ?

[ திருப்புக

www.usefuldesk.com



25. நல்லார் தொடர்பு கைவிடல் எத்தன்மைத்து ?

26. வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார் ?

27. ஆற்றுதல் என்பது யாது ?

## பகுதி - 2

VI. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **5x2=10**

28. உயர்தனிச் செம்மொழியின் மொழிக் கோட்பாடு குறித்து எழுதுக.

29. கல்விப்படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை ?

30. தமிழகத்திலிருந்து எந்தெந்த நாடுகளுக்கு எந்தெந்தப் பொருள்கள் அனுப்பப்பட்டன ?

31. அணுச்சேர்ப்பும், அணுப்பிரிப்பும் பற்றி ஔவையார் மற்றும் கம்பர் கூறியவற்றை எழுதுக.

32. காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது ?

33. வளரும் பிள்ளைகளுக்கு இராமலிங்கர் வழங்கிய அறிவுரைகளுள் இரண்டனைக் கூறுக.

34. பட்டப் படிப்புகளில் எவையேனும் நான்கனை எழுதுக.

www.usefuldesk.com

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 24)

## பகுதி - 1

VII. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **3x4=12**

35. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை ?

36. விருத்த மாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை ?

www.usefuldesk.com

www.usefuldesk.com



37. எதனைச் செல்வம் என நற்றிணைப் பாடல் கூறுகிறது ?

38. சீறாப்புராணம் – குறிப்பு எழுதுக.

39. ‘செடி வெற்றி கொண்டேந்திய பூவினிலே’ – என்னும் தொடர்மூலம் இளந்திரையன் உணர்த்தும் கருத்து யாது ?

பகுதி - 2

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **3x4=12**

40. சொத்துரிமை குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை ?

41. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை ?

42. மேடைப்பேச்சின் முடிவு எவ்வாறு அமைதல் வேண்டும் ?

43. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

44. கடல் வாணிகத்தில் தமிழர் சிறந்திருந்தமை குறித்துத் தொன்மைத் தமிழகம் வாயிலாக விளக்குக.

பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

IX. 45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5x1=5

அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர
நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே.

(i) இப்பாடலின் ஆசிரியர் யார் ?
(ii) யாணர் – பொருள் தருக.
(iii) பனையோலைப் பெட்டியில் எதைக்கொண்டு சென்றனர் ?
(iv) சென்ற வட்டி – இலக்கணக் குறிப்பு தருக.
(v) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது ?

[ திருப்புக

www.usefuldesk.com

www.usefuldesk.com



46. கீழ்க்காணும் உரைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். **5x1=5**

தமிழினம் தனக்குவமையில்லா ஒரு தனி இனம். தமிழர் நாகரிகம் தன்னிகரில்லா தனி நாகரிகம். தமிழர் உணவு, உடை, விருந்து, ஈகை, பொறை, நடுவு நிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்ததிருந்தனர்.

உழவையும், தொழிலையும் மதித்திருந்தனர். வினையை ஆடவர் உயிராகக் கருதினர். சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினர். விருந்தெதிர் கொண்டு வாழ்ந்தனர். புகழெனில் உயிரும் கொடுக்க முனைந்தனர். பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர். ஈந்து உவந்து இன்பம் கண்டனர். இத்தகைய நாகரிகமும் பண்பாடும் மிக்கவராகத் தமிழர் வாழ்ந்தனர்.

**வினாக்கள்.**

(i) தமிழர்களின் நாகரிகம் எத்தகையது ?

(ii) தமிழர்களின் சிறந்த பண்புகள் எவை ?

(iii) கல்வியின் முடிவு எது ?

(iv) புகழ், பழி குறித்து இப்பகுதியில் கூறப்படுவன யாவை ?

(v) இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பைத் தருக.

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

X. கீழ்க்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **2x8=16**

47. (அ) கங்கையின் மறுகரை அடைந்த குகனிடம் இராமன் கூறியவற்றைத் தொகுத்தெழுதுக.

**அல்லது**

(ஆ) "பொருள் செயல்வகை" என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

48. (அ) பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவனவற்றை எழுதுக.

**அல்லது**

(ஆ) கலை அறிவியல் கல்வி, சிறு தொழில் கல்வி குறித்து விவரிக்கவும்.

www.usefuldesk.com

www.usefuldesk.com



பகுதி - 2

**49.** பின்வரும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. **2+2+6=10**

செய்யுள் வடிவில் விடை தருக.

(அ) 'ஞாலம்' எனத் தொடங்கும் குறள்

(ஆ) 'நிலை' என முடியும் குறள்

(இ) 'நல்லதாய்' எனத் தொடங்கும் பெரிய புராணப் பாடல்

- o 0 o -

www.usefuldesk.com

www.usefuldesk.com